செய்தி வெளியீடு எண் : 073 நாள் : 11.01.2023

# அயலகத் தமிழர் தின விழா

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அயல்நாடுகளில் தமிழச்சங்கங்களை ஒருங்கிணைக்கவும், அயலகத்தில் உள்ள சாதனைத் தமிழர்களை பெருமைப்படுத்தும் விதமாகவும் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 12 ஆம் நாள் அயலகத் தமிழர் தினமாக கொண்டாடப்படும் என்ற அறிவிப்பின் படி தமிழ்நாடு அரசின் சார்பில் இந்த ஆண்டின் அயலகத் தமிழர் தின விழாவின் முதல் நாள் நிகழ்ச்சியில் இன்று காலை 09.30 மணிஅளவில் சென்னை கலைவாணர் அரங்கத்தில் மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் நலத்துறை அமைச்சர் திரு. செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள் தலைமையில் மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர் திருமிகு , கனிமொழி கருணாநிதி அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது

உலகெங்கும் தமிழர் இடம்பெயர்வு அங்கு மேறகொள்ளப்பட்டுள்ள ஆய்வுகள் மற்றும் தமிழ்மொழி கற்பித்தல் என்ற தலைப்பில், அயல்நாடுகளில் தமிழர் வரலாறு, அயலகத் தமிழர்கள் பிற நாடுகளில் மேற்கொண்ட தமிழாய்வு " அயலகத் தமிழர்களுக்கு தமிழ் கற்றல் கற்பித்தல் " என்ற பொருள்களில் கருத்தரங்கங்கள் நடைபெற்றது .

அதனைத் தொடர்ந்து அயலகத் தமிழர்களுக்கான நலத்திட்டங்கள் மற்றும் தமிழ்ச்சங்கங்களின் பங்களிப்பு என்ற தலைப்பில் அயலகத் தமிழர்களுக்கான அயலகத் தமிழர்களின் தேவைகளுக்கான அரசின் நலத்திட்டங்கள் , அயலகத் தமிழர் நலனில் தமிழச்சங்கங்களின் பங்களிப்பு என்ற தலைப்புகளிலும் மேலும் தொழிற்துறையில் அயலகத் தமிழர்களின் பங்களிப்பு மற்றும் தமிழ்நாட்டில் முதலீடுகள் என்ற தலைப்பில் அயல்நாடுகளில் இருந்து தமிழ்நாட்டில் தொழில் தொடங்க ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகள் அயல்நாடுகளில் தமிழர்களின் தொழில் முன்னெடுப்புகள் என்ற கருப்பொருளில் கருத்தரங்கம் நடைபெற்றது.

நிறைவாக அயலகத் தமிழ் மாணவர்கள் தமிழ்நாட்டில் கல்வி கற்க உள்ள வாய்ப்புகள் பல்கலைக்கழகக்களுக்கிடையேயான மாணவர் பரிமாற்றம் என்ற தலைப்பிலும் கருத்தரங்கம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு உயர்கல்வித் துறை முனைவர்.க.பொன்முடி. மாண்புமிகு தொழிற்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு, மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு.மனோ தங்கராஜ் அவர்களும், மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள்.திருச்சி சிவா, தயாநிதிமாறன் , தமிழச்சி தங்கப் பாண்டியன் , மருத்துவர் கனிமொழி என். வி.என் சோமு , மருத்துவர் கலாநிதி வீராசாமி , என்.ஆர்.இளங்கோ , கிரிராஜன், அரசு செயலாளர் திரு.கிருஷ்ணன் இ.ஆ.ப., முனைவர் டி.ஜெகந்நாதன், இ.ஆ.ப., திருமதி.ஜெஸிந்தா லாசரஸ், இ.ஆ.ப., திரு.மரு. ஆர்.செல்வராஜ், இ.ஆ.ப., திரு.மகேஸ்வரன், இ.ஆ.ப., முனைவர் கார்த்திகேயன் இ.ஆ.ப., திருமதி.பூஜா குல்கர்ணி. இ.ஆ.ப., திரு.வீ.ப.ஜெயசீலன், இ.ஆ.ப., உள்ளிட்ட பல்வேறு அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் 50க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து தமிழச்சங்கத்லைவர்கள், 500க்கும் அதிகமான அயல்நாட்டு பிரதிநிதிகள்மற்றும் அயல்மாநில தமிழ்ச்சங்கங்க உறுப்பினர்கள் உட்பட ஆயிரத்திற்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர். தமிழ் பாரம்பரிய கலாச்சார கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை, கலைவாணர் அரங்கில் நாளை (12.01.2023) அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் நடைபெறும் "அயலகத் தமிழர் தினம் 2023" விழாவில் கலந்து கொண்டு அயலகத் தமிழர்களுக்கான புதிய நலத் திட்டங்களை தொடங்கி வைக்கிறார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in